# இலங்கைச் சுற்றுலாவின் உயரிய அமைப்பான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துங்கள்

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் தொடர்புடைய தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான அரசாங்க அதிகாரசபை ஆகும். சுற்றுலாத் துறை, எதிர்காலத்தில் தேசிய பொருளாதாரத்திற்கு ஒரு முக்கியமான பங்களிப்பாளராக அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்துறை நாட்டிற்கு அதிகளவான நேரடி வெளிநாட்டு முதலீடுகளையும் உயர்மட்ட முதலீட்டாளர் திட்டங்களையும் ஈர்க்கின்றது.

அதிகாரசபையில் தற்போதுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவி | வகை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | உதவிப் பணிப்பாளர்/ சுற்றுலா அபிவிருத்தி | MM 1-2 | 04 |
| 02. | உதவிப் பணிப்பாளர் / சட்டம் | MM 1-2 | 01 |
| 03. | உதவிப் பணிப்பாளர் / நிதி முகாமைத்துவம் | MM 1-2 | 02 |
| 04. | இளநிலை முகாமையாளர்/ சுற்றுலா அபிவிருத்தி | JM 1-2 | 02 |
| 05. | இளநிலை முகாமையாளர்/ Web Presence | JM 1-2 | 01 |
| 06. | விசாரணை அதிகாரி | MA 5-2 | 02 |
| 07. | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 10 |

**ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் :**

- தேவையான தகுதிகள் உட்பட விரிவான வெற்றிட அறிவிப்பு SLTDA இணையதளத்தில் உள்ளது *Careers* – http://www.sltda.gov.lk/en/careers.
- விண்ணப்பதாரர்கள் அதே இணையப் பக்கத்தில் குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்ய வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் பதவியின் கடமைகளைத் திறமையாக மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் மன ரீதியான தகுதியைப் பெற்றிருக்க வேண்டியதுடன் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, கல்வி, தொழில்சார் மற்றும் தொழிற்சார் தகுதிகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள், அனுபவத்திற்கான ஆதாரத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் (referees) தொடர்பு விவரங்கள் ஆகியவற்றுடன், 08.01.2026 அன்று அல்லது அதற்கு முன்னர், பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்:

  **தலைவர்,**
  **இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
  **இல. 80, காலி வீதி, கொழும்பு 03**

  விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.
- தற்போது, அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச் சட்ட சபைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை குறித்த திணைக்களத் தலைவர்கள் ஊடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறைந்தபட்சத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களைச் சுருக்கிப்பட்டியலிடுவதற்கு முகாமைத்துவத்திற்கு உரிமை உண்டு. எந்த முறையிலும் சிபாரிசு பெறுவது ஒரு தகுதியிழப்பாகக் கருதப்படும்.

**ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்பு**

தெரிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 10% பங்களித்தல் வேண்டும். அதேவேளை அதிகாரசபை, 15% பங்களிப்பைச் செய்வதுடன் இதற்கு மேலதிகமாக, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% செலுத்தப்படும்.

**சம்பளம்**

இப்பதவிக்குரிய சம்பளம், 2025.04.01 ஆம் திகதியிலிருந்து அமுலான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருப இல. 01/2025 இன் படி வழங்கப்படும்.

பதவியிடங்களை நிரப்புதல் மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பாக அதிகார எடுக்கும் தீர்மானங்கள் இறுதியொன தீர்மானங்கள் ஆகும்

**தலைவர்,**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,**
**80, காலி வீதி,**
**கொழும்பு 03.**

**வெளியிடப்பட்ட திகதி: 08.01.2026**